Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 9



























# INDEX


| | |
|---|---|
| GHAT-KARPUR | 1-13 |
| VISION OF GOD | 14-19 |
| GOOD LUCK | 20-29 |
| HAIR STYLE | 30-35 |
| VICTORY-DEFEAT | 36-44 |
| VALUE OF TIME | 45-52 |
| VALUE | 53-60 |
| HONESTY OF THIEF | 61-68 |
| INTELLIGENCE | 69-74 |


காட் கர்புர்


மிதிலாபூர் இரஜ்ஜியத்தில் காட், கர்புர் என்று மிக இழி பெயர் பெற்ற இரு திருடர்கள் இருந்தனர்.
அவர்களைப்பிடிக்க எடுத்த அத்தனை முயற்சிகளும் வீணாகி விட்டன. பிடிக்க சென்ற சிப்பாய் களைக்கண்டு அவர்கள் ஏளனமாக சிரித்தனர்.
ஒரு நாள் அவர்களுடைய மறைவிடத்தில் ...
காட், எத்தனை நாள் நாம் இந்த சின்ன வீடுகளையும், பயணி களையும் கொள்ளையடிப்பது ? நாம் ஒரு நிலைக்கு வர நேரம் வந்து விட்டது. எதாவது பெரியதாய் செய்வோம்.
நீ சொல்வது சரி தான். எனக்கும் இந்த சின்ன சின்ன களவுகளால் பேஜாராக உள்ளது. ஆனால் இராஜ்ஜியத்தில் யாரிடம் அவ்வளவு அதிக செல்வம் இருக்கிறது ?


அடுத்த நாள் இரவு, ஒரு பெரிய சுவற்றின் அடியில் ...
கர்புர், நான் இங்கே இருந்து பார்த்துக்கொள்கிறேன். நீ உள்ளே போய் எல்லாத்தையும் சுரண்டு.
சரி, எதாவது இடைஞ்சல் இருந்தால் நான் உனக்கு சைகை செய்கிறேன்.
அவன் மெதுவாக தோட்டத்தில் நடந்து செல்லும் பொழுது, வீட்டு மேல் அறையிலிருந்து, கொஞ்சம் விளக்கொளி வந்துகொண்டிருந்ததை பார்த்தான்.
அவன் மேலே ஏறி, அறைக்குள் ஒரு அழகான பெண் தூங்கிக்கொண்டிருந்ததை பார்த்தான்.
ஒஹ் என்ன அழகு, இவ்வளவு அழகான பெண்ணை என் வாழ் நாளில் பார்த்ததில்லை
அவன் படுக்கைக்கு பக்கத்தில் சென்று, பெண்ணின் அருகில் அமர்ந்து அவளையே உற்றிப்பார்த்தான்.


திடீர் என அவள் கண் திறந்து, இவனைப்பார்த்தாள்.
ஆ ...
ஷ்ஷ்ஷ் ... தயவு செய்து, சத்தம் போடாதே, நான் உன்னை புண்படுத்த மாட்டேன்.
தட்... தட் ... தட்..
காவல்காரர்கள் உள்ளே வருகிறார்கள் ..
இளவரசி, பாதுகாப்பாக இருக்கிறீர்களா ? என்ன நடந்தது, யார் இந்த ஆள் ?
நீங்கள் எங்கே இருந்தீர்கள், கடமையில் தூங்கிக்கொண்டி ருந்தீர்களா? என் அறைக்குள் இவன் நுழைந்திருக்கிறான். இவனை உடனே கைது செய்யுங்கள்.


காட், அரண்மனையில் நடக்கும் குழப்பத்தை கேட்டான்.
ஒஹ் இல்லை, காபுர் பிடிபட்டிருப்பான். அவர்கள் என்னை பிடிப்பதற்கு முன், நான் இங்கிருந்து தப்பிக்க வேண்டும்.
அடுத்த நாள், ராஜ சபையில் ..
எவ்வளவு தைரியம் உனக்கு இளவரசியின் அறைக்குள் நுழைய, இந்த போக்கிரியின் தலையை சூரியன் மறையும் முன் வெட்டுங்கள்.
மன்னா, சாந்தி அடையுங்கள். நான் புரிந்து கொண்டேன், இவன் நமக்கு தொந்தரவு கொடுத்து வந்த இருவரில் ஒருவன்.
ஆமாம், நானும் இவனை அடையாளம் கண்டேன்.
தலையை வெட்ட நிறைய காரணங்கள் உள்ளன, சிப்பாய்களே ..
இல்லை, பொறுங்கள் மன்னா. மற்றவனையும் பிடிக்க இது பொன்னான வாய்ப்பு. நாம் ஒரு அறிக்கையை விடுவோம், கர்புர் மூன்று நாட்களில் தலை வெட்டப்படுவான், என்று.


ஏன் மூன்று
நாட்கள் பொறுக்க
வேண்டும் ?
ஏனெனில், இந்த முன்று
நாட்களில், இவனை மீட்க
இவன் கூட்டாளி
முயல்வான். அப்பொழுது
நாம் அவனையும்
பிடித்து விடலாம்.
ஒஹ், அது நல்ல
திட்டம், உடனே, அறிக்கை
விடுங்கள்.
அடுத்த நாள் இராஜ்ஜியம்
முழுவதும் அறிக்கை அனுப்பப்படுகிறது.
பயங்கர கள்ளன் கர்புர்
இன்றிலிருந்து மூன்று
நாட்களில் அவன்
குற்றங்களுக்காக
தூக்கிலிடப்படுவான். அது
வரை, அரண்மனையின் வட-
கிழக்கு வாசலில் கூண்டில்
அடைக்கப்பட்டு, மக்கள்
பார்வைக்கு வைக்கப்படுவான்.
ஒஹ் ஆண்டவனே.
கர்புர் மாட்டிக்கொண்டான்,
அவனை எப்படியாவது
மீட்க வேண்டும்.
மோரு, மோரு ...
குளிர்ந்த மோரு ...
ஒய்ய்.. இங்கே வா.


ஏய், எல்லாருக்கும் ஒரு குவளை மோர் கொடு...
நிச்சயமாக, குழந்தாய் .. வேண்டியதை குடியுங்கள்.
குழந்தே, யார் இந்த ஆள், கூண்டில் இந்த மாதிரி அடைக்கப்பட்டு ?
யார் ? இவன் ? கொள்ளையடித்து, எங்களை தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்த இருவரில் இவன் ஒருவன்.
பின்னே ஏன் இவனை இவ்வளவு திறந்தவெளியில் பூட்டி வைத்திரு க்கிறீர்கள், இவன் கூட்டாளி இவனை காப்பாற்ற முயலமாட்டானா ?
கவலைப்படாதே, அவனையும் பிடிக்க இது ஒரு வலை. இந்த கூண்டு மிக பலமானது. அரசனிடம் இருக்கும் சாவியைக்கொண்டு தான் இதை திறக்க முடியும்.
அது மட்டுமல்ல, சிப்பாய்கள் கடைகளில் உள்ளனர். யாராவது, இவனை மீட்க வந்தால், மறைந்து இருவரையும் பிடித்து விடுவோம்.
ஓய்... நீ, உங்கள் இடத்துக்கு உடனே போங்கள், நகருங்கள்.


ஒய், மோருக்கு நன்றி. நான் போகிறேன். இந்தா மோருக்கு பணம்.
நன்றி, என் குழந்தே, ஆண்டவன், ஆசிர்வதிக்கட்டும்.
அன்றிரவு, காட் யோசனையில் தன் மறைவிடத்தில் அமர்ந்திருந்தான்.
ஆக, அவர்கள் என்னை பிடிக்க வலை விரித்திருக்கிறார்கள், அப்படியா ? காட் என்ற களவின் மன்னனான என்னை பிடிப்பது, கடினம் மட்டுமல்ல, முடியாத காரியம் கூட, என்பதை காட்டுகிறேன்.
கர்பூரை மீட்க இரவு முழுவதும் திட்டம் போட்டான் காட்.
அடுத்து, அவனுக்கு தெரிந்த சில நண்பர்களை சந்தித்தான்.
என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்கு தெரியும். ஆனால் நெருக்கடி ஆரம்பித்தவுடன் ஜாக்கிரதையாக தப்பித்து செல்ல வேண்டும். இல்லையெனில் சிப்பாய் கள் கைது செய்து விடுவர்.
ஒஹ், கவலைப்படாதே காட், மானைப்போல சுறுசுறுப்பாக இருப்போம் .
இந்தாருங்கள், இந்த நூறு காசு.
நன்றி.



காஷ்! இந்த ரௌடிக்கு இரவு பகலாக காவலிருக்கிறோம், அந்த காட் என்ன செய்கிறான், எங்கே இருக்கிறான்.
இவனை விட்டு விட்டு, ஓடிப்போய் இருப்பானோ ?
டுன்.... டுன்.... டும்....டும்..
அங்கே என்ன நடக்கிறது, ஏன் மக்கள் கூடுகிறார்கள்.
ஏதோ நிகழ்ச்சி மாதிரி தெரிகிறது, ஐயா.
திடீர் என்று ...
வெடி ... பூஷ்ஷ்ஷ் ...
நீ, நில்! என்ன ஆச்சு?
செப்பிடு வித்தை செய்யும் பொழுது கடைகள் விபத்தாக தீப்பிடிக்கின்றன.


ஒஹ் ஆண்டவனே,செப்பிடு சிப்பாய்கள் உள்ளே மறைந்திருக்கின்றார்கள். ஐயா, இப்பொழுது, நாம் என்ன செய்ய வேண்டும் ?
நாம் நமது மக்களை மீட்க வேண்டும். நான் இங்கே காவலிருக்கிறேன். நீங்கள் போய் நம் மக்களை காப்பாற்றுங்கள். போங்கள் ...
ஒரு சிப்பாய் அவனிடம் ஓடி வந்து ..
என்ன சிப்பாய், என்ன நடந்தது?
பான்ட், பான்ட் ..
ஐயா, தீ வேகமாக பரவுகிறது. எங்களால் அடக்க முடியவில்லை. நாங்கள் என்ன செய்ய ?
அரண்மனைக்கு போய் மன்னனிடம், இன்னும் மேற்கொண்டு உதவியை கேளுங்கள்.
மன்னா, வட கிழக்கு வாசலில் தீ விபத்து ஆயிற்று. நம் ஆட்கள் அணைக்க முயல்கிறார்கள்.
யாருக்காவது காயமா ?
இல்லை மன்னா, ஆனால் தீ, வேகமாக, கைதியின் கூண்டு பக்கம் பரவிக்கொண்டு வருகிறது. கைதியை சிறைக்கு அனுப்புவது நல்லது.


ஆமாம், நல்ல யோசனை. இதோ கூண்டு சாவி. அவனை உடனே இடம் பெயர்த்து. இல்லையெனில், அந்த காட் குழப்பத்தில் சுலபமாக அவனை மீட்க முயற்சிப்பான்..
நன்றி, மன்னா..
சிப்பாய் போன உடன், மந்திரி உள்ளே வந்தான்.
மன்னா என்ன ஆச்சு, அந்த சிப்பாய் முகம் கறுத்து காணப்பட்டது.
வட கிழக்கு வாசலில் தீ விபத்து ஏற்பட்டிருக்கு. சிப்பாய் வந்து, கைதியை சிறைச்சாலைக்கு மாற்ற உத்தரவு கேட்டான்.
என்ன ஆச்சு, ஏன் ஆழ்ந்த யோசனை ?
மன்னா, நான் ஒன்றை கவனித்தேன். தீயினால் சிப்பாயின் முகம் கறுத்திருந்தது, ஆனால் துணிகள் இல்லை.
நீங்கள் சித்தப்பிரமை பிடித்தவனாக... சிப்பாய் மோசடி செய்பவன் என நினைக்கிறீர்களா ?
அது தான், அந்த ஆள் நமது சிப்பாய் இல்லை, காட் தான் சிப்பாய் வேடம் போட்டு வந்திருப்பான்.


காவலர்களே,
காவலர்களே.
அவன் பின்னால்.
ஐயா, மேற்கொண்டு உதவி வருகிறது. ஆனால் கைதியை சிறைக்கு மாற்ற எனக்கு அரசர் கட்டளையிட்டி ருக்கிறார்.
சரி, செய், நான் இங்கே இருந்து உதவி வந்தவுடன், சேர்ந்து கொள்கிறேன்.
என்னால், நம்ப முடிவில்லை, காட், இது நீயா ?
ஷ்ஷ்ஷ்... சத்தம் வேண்டாம், வா, சீக்கிரம் இங்கிருந்து கிளம்பு.
சீக்கிரமே, சிப்பாய்கள், மந்திரி, மன்னன் வட கிழக்கு வாசலுக்கு வருகிறார்கள்.
கைதி எங்கே ?
நீங்கள் அனுப்பிய சிப்பாய் அவனை சிறைச்சாலைக்கு கொண்டுபோய் இருக்கிறான். ஏன் மன்னா, என்னவாயிற்று.


ஒஹ், இல்லை நம் கையாலேயே அவனை தொலைத்து விட்டோம்.
மன்னா, கூண்டின் மீது ஏதோ இருக்கிறது.
தொப்பி அணிந்த ஒரு கழுதையின் படம் அங்கே ஒட்டப்பட்டுள்ளது. அனைவரும், வாய் பிளந்தாற்போல் அதை பார்த்துக்கொண்டு இருந்தனர்.
இந்த மாதிரி, அந்த இரு கள்ளரும், மீண்டும் ஒரு முறை அரச படையின் பிடியிலிருந்து பிரமிப்பு தரும் வகையில் தப்பிச்சென்றனர்.
காட், கர்புர் சிரித்துக்கொண்டே அரசனின் படைகளை பார்க்க, அரசன் கோபத்துடன் குதிக்க, மந்திரி அரசரை சமாதானப்படுத்த, சிப்பாய் மண்டியிட்டு மன்னிப்பு கேட்டுக்கொண்டிருந்தான்.
முற்றும்

# தேவ தரிசனம்




ஓரிடத்தில் ஒரு பூஜாரி வாழ்ந்து வந்தான். மக்கள் அவன் அறிவுரைக்கும், ஆசி பெறவும், வந்துகொண்டிருந்தனர்.
மக்கள் அவர் தேவனின் அவதாரம் என நினைத்தனர். சிலர் அவரைக் கண்டு பொறாமை கொண்டனர்.
ஒரு நாள் கிராமத்தின் நிலக்கிழார் மகன் பூஜாரியிடம் வந்தான்.
நீங்கள் கடவுளைப்பார்த்ததாக எல்லோரும் சொல்கிறார்களே.
ஆமாம், இப்பொழுது நான் கடவுளைப் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறேன். நீயும் பார்க்கலாம்.
அவன் எங்கே இருக்கிறான் ?


உனக்கு எதிரில்.
நான் ஒன்றும் பார்க்கவில்லை
நீங்கள் பொய் சொல்கிறீர்கள், அங்கே கடவுள் இல்லை, நீங்களும் கடவுளை பார்க்க முடியாது, ஆகவே பொய் சொல்வதை நிறுத்துங்கள்.
மகனே, நீ கடவுளைப்பார்க்க வேண்டுமா? நாளை வா. ஆனால் ஒரு நிபந்தனை. நீ ஒரு நாள் விரதம் இருக்க வேண்டும், எதையும் சாப்பிடக்கூடாது.
சரி, நான் நாளை வருகிறேன்.
அடுத்த நாள், எதையும் சாப்பிடாமல் அவன் வந்தான். அவன் வரும் பொழுது கொஞ்சம் ஆர்வத்துடன் இருந்தான். ருசியான உணவுகள் ஒரு தட்டில் வைக்கப்பட்டு, பூஜாரியின் முன் பரிமாறப்பட்டிருந்ததை கண்டு அவன் ஆச்சரியப்பட்டான்.


இந்த உணவு, எனக்கு தான். நீ விரதம் இருக்கிறாய், நான் இல்லை.
இது எல்லாம் என்ன ?
ஷியாம் சவாலை ஏற்றுக்கொண்டு, பூஜாரியின் முன் அமர்ந்தான்.
இது ஒரு சோதனையாக இருக்கும்.
பூஜாரி மாலை வரை உண்டுக்கொண்டே இருந்தான்/
இன்று நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், நலமாக உணர்கிறேன். ஆனால் நீ ஏன், சோர்ந்து போய் இருக்கிறாய்.?
நான் காலையிலிருந்து விரதம் இருக்கிறேன், இயற்கையாக பசி உன்னை சோர்ந்தவனாகவும், பலவீனமாகவும் ஆக்கி விடும்.


பசியா, எங்கே இருக்கிறது ?
நீ பொய் சொல்கிறாய் , நான் பசியை பார்க்கவுமில்லை, உணரவுமில்லை.
காலையிலிருந்து, நீ எதையாவது சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறாய். எப்படி பசியை உணர முடியும் ?
நாம் ஒரே அறையில் காலையிலிருந்து இருக்கிறோம். ஒருவனுக்கு பசிக்கிறது, மற்றவனுக்கு பசிக்கவில்லை. அது எப்படி சாத்தியம் ஆகும்.
நீ கடவுளைப்பார்க்க வேண்டுமானால், உலக பொருள்களின் மீதுள்ள பிடிப்பை விலக்க வேண்டும். நான், எனக்கு என்பதை விட்டு, மற்றவரைப்பற்றி யோசிக்க வேண்டும். பிறகு நீ கடவுளை எங்கும் காணலாம்.



ஷியாம் கடவுளைப்பார்க்கும் இரகசியத்தை தெரிந்து கொண்டான். நீ உணவின் மீதுள்ள பிடிப்பை விட்டால், பசிக்கும், அதேபோல், நாம் உலக பொருள்களின் மீதுள்ள பிடிப்பை விட்டால், கடவுளைக்காணலாம்.
என்னைப்போல் மக்களுக்கு பசியை அடக்குவது கஷ்டமாக உள்ளது. அதிக கஷ்டமானது, கடவுளை காணுவது.
அன்று முதல் ஷியாம் ஒரு மாறி விட்ட ஆள். அவன் மற்றவர்களுக்கு உதவ ஆரம்பித்தான்.
தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். என் அறியாமையால், நான் உங்களை சோதிக்க முயன்றேன்.
முடிவு


கன யோகம்


ஒரு காலத்தில், ஒரு கிராமத்தின் சந்தையில்..
ஒஹ் இல்லை, திருடன்... யாராவது பிடியுங்களேன்..
திருடன் பில் இடம் பணத்தை திருடிக்கொண்டு ஓடி விட்டான்
பில் நடந்ததை விளக்கினான்.


நீ வெளியே போகும் பொழுது, யார் குறுக்கே வந்தது...?
கிரஹாம்.
பில் அவ்வளவு பணத்துடன் வெளியில் போகும் பொழுது, யார் குறுக்கே வருகிறார் என்பதை நீ கவனிக்க வேண்டும்.
கிரஹாம் கெட்ட யோகக்காரன் என்பது தெரியுமா? இதை அனைவரும் அறிவர்
எனக்கு தெரியும் அம்மா, ஆனால் கிரஹாம் காலையில் சும்மா ஊரை சுற்றி வருவான்.


கெட்ட யோகக்காரன் என்பதை அவன் அறிவான். பில் அவனை கூப்பிடு, நான் பேசுகிறேன்.
பில் கிரஹாம் வீட்டிற்கு போகிறான்.
என்ன ஆச்சு ?
கிரஹாம் காலை என் குறுக்கே வந்தான், நான் என் ஆட்டை தொலைத்தேன்.
எனக்குக் கூட... என் காலுக்கு அடி பட்டது.


கிரஹாம் இருக்கிறானா?
இல்லை மகனே, அவன் வீட்டில் இல்லை
பில் கிரஹாம் உடைய தாயுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, இரண்டு தேர்கள் வீட்டுக்கு முன் வந்து நின்றன.
மகனே, இது எல்லாம் என்ன ?
அம்மணி, நான் விளக்குகிறேன்.


மூன்று நாள் முந்தி, கிரஹாம் எங்கள் கிராமத்திற்கு வேலைக்காக வந்து தங்கினார்.
அடுத்த நாள் முதல், மக்களுக்கு நல்லது நடக்க ஆரம்பித்து விட்டது.
டேவிட் வீட்டிற்கு முன் கிணறு வெட்டிக்கொண்டிருந்தான். என்ன ஆயிருக்கும் யூகியுங்கள்,.. தங்க கலசங்கள் கிடைத்தன.
இன்னொரு பணக்காரன் ரொம்ப நாளா, நோய்வாய் பட்டு இருந்தார். ஆனால், அவர் சிகிச்சை பெற்று, அன்றே குணமாகி விட்டார்.


ஆக, பல பேர், அன்று பயனடைந்தனர். அனைவரும் சேர்ந்து யோசித்தோம், கிரஹாம் இதற்கு காரணமாக இருக்கலாம், ஏனெனில் பல நன்மைகள் அன்று நடந்துள்ளன ...
எல்லொரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தோம், அனைவரும் கிரஹாமை எங்கேயாவது நாள்தோறும் குறுக்கே சந்திக்க வேண்டும்.
அவர்கள் கிரஹாமை கௌரவித்தனர் நன்றியுடன்..
நீங்கள், எங்கள் கிராமத்தில் தங்கினால், எங்களுக்கு கௌரவமாயிருக்கும்.



வருந்துகிறேன் ஐயா, என் வீட்டையும் கிராமத்தையும் விட்டு நான் வர இயலாது.
சரி, தயவு செய்து, இந்த சிறிய பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.
கிராமத்தினர், தங்க காசுகள் கொண்ட ஒரு பையை அவருக்கு கொடுத்தனர்.
மரியாதைகளுடன், கிரஹாமை ரதத்தில் ஏற்றி அனுப்பி வைத்தனர்.
ஐயா, இது உங்கள் கன யோகம், அப்படியெல்லாம் நடந்துள்ளது. ஆனால் கிரஹாம் எங்களுக்கு கெட்ட சகுனம்.


அது சரி பில், அவர்களெல்லாம் நல்லவர்கள், ஆகவே, அவர்களுக்கு நல்லதே நடக்கிறது.
ஆனால் நமது மக்கள் எதிர்மறையை சார்ந்துள்ளதால், நான் கெட்ட சகுனம் என்று என் மீது பழி சுமத்துகிறார்கள்.
நிலைமையை எதிர்கொண்டு, பிரச்சனைகளை சமாளிப்பதற்கு பதிலாக, என்னை குறை கூறுகிறார்கள்
ஐயா, உங்கள் கிராமத்து மக்கள், எப்பொழுதும் நல்லதை நினைத்து, நேர்மறையில் சிந்திக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு நல்லதே நடக்கிறது.


என் கிராமத்தினர், அவர்களின் தவறுகளுக்கு, மற்றவரை குறை கூறுகின்றனர், ஆகவே. இவர் களுக்கு நல்லதே நடக்காது.
கிரஹாம், நீங்கள் உங்கள் மனதை மாற்றிக்கொள்ளலாமே ?
இல்லை ஐயா, இந்த கௌரவமே எனக்கு போதும்.
கவலைப்படாதீர்கள், நான் இப்பொழுது ஏழை இல்லை, ஆகவே, என்னை மக்கள் கெட்ட சகுனமாக கருத மாட்டார்கள்/
எதிர்மறையை, அவர்களுடைய நடத்தைக்கு வெட்கப்பட்டனர். கிரஹாம் அதன் பின் சந்தோஷமாக வாழ்ந்தார்.
முடிவு

# முடி அலங்காரம்




ஸ்டீபன் நாடறிந்த மரியாதைக்குரியவர்.
ஒரு வருடத்திற்கு முன் அவர் சொத்தை கஞ்சனான தன் மகன் எட்வார்டுக்கு விட்டு சென்றார்.
எட்வார்ட் முடி திருத்திக்கொள்ள ஒரு நாள் முடி திருத்துபவரை வீட்டிற்கு அழைத்தான்.
பாப், எனக்கு நன்றாக முடி திருத்து, என் தந்தைக்கு இருந்த மாதிரி.
உன்னால் செய்ய முடியும் என நினைக்கிறாயா?
நிச்சயமாக ஐயா, என்னை நம்புங்கள்.
பாப் முடி திருத்துகிறான்.


என் முடிக்கு கஞ்சனான செய்தாய்? இது என் அப்பாவுடைய அலங்காரத்துக்கு ஒத்து வரவில்லை.
ஐயா, நீங்கள் யாரையும் கேட்டுக்கொள்ளுங்கள், நான் என் தொழிலில் முழு நம்பிக்கை கொண்டவன், தயவு செய்து, என் கட்டணத்தை கொடுங்கள்.
இதற்கு நான் ஒரு பைசாவும் கொடுக்க மாட்டேன்.
இருவரும் இந்த பிரச்சனையில் சண்டையிட்டு, கிராம அதிகாரியிடம், நியாயத்திற்கு போகின்றனர்.


அதிகாரி, இருவரின் புகார்களையும் கேட்டார்
முழு கிராமமும் எட்வார்ட் ஒரு கஞ்சன் என்று அறியும். அவன் பணம் கொடுக்காமலிருக்க திட்டம் போடுகிறான், என்பது நிச்சயம்.
கிராம அதிகாரி ஒரு யோசனைக்கு வருகிறார்.
சரி, எட்வார்ட், உனக்கு இந்த அலங்காரம் பிடிக்காததால் நானே முன் நின்று உன் அப்பாவின் முடி அலங்காரத்திற்கு ஈடாக உன்னுடைய முடியை வெட்டச் செய்கிறேன்.


ஏன் இன்னொரு முடி திருத்தலை இலவசமாக பெறக்கூடாது! இதையும் எதாவது சாக்கு சொல்லி ஏற்கக் கூடாது.
சரி பாப், இது உனக்கு இரண்டாவது வாய்ப்பு.
கிராமத்து அதிகாரி பாப்-க்கு ஏதொ குசுகுசுக்கிறார்.
முடிந்தது. கண்ணாடியில் பார்.


எட்வார்ட் கண்ணாடியில் பார்க்கின்றான். மொட்டை அடிக்கப்பட்டதை !!
நீ என்ன செய்தாய் பாப்?
உன் சிகை அலங்காரம் அப்பாவுக்கு சரியாக ஒத்துப்பொகிறது. நீ ஏற்க மறுத்தால், அவர் சமாதியை தோண்டிப்பார், அவர் தலை மொட்டையாய் இருக்கும்.
எட்வார்ட் வெட்கப்பட்டு, பாப்-க்கு பணம் தருகிறான்
நன்றி ஐயா.
முடிவு


வெற்றி தோல்வி


சன்னியும் பன்னியும் நல்ல நண்பர்கள், தம் பிழைப்புக்கு மாங்காய் விற்று வந்தனர்.
ஒய், இன்று நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். இன்று என் மாங்காய் நல்ல விலை போனது.
எனக்கும் கூட... வா ஏதாவது சாப்பிட்டு ஓய்வு கொள்ளலாம், ரொம்ப சூடாக உள்ளது.
ஒஹ், ஆண்டவனே, உதவி ... உதவி
அப்பொழுது ஒரு யானை சந்தையில் மக்களை தாக்குகிறது.


சிப்பாய் கள் யானையை அடக்க முயல்கிறார்கள், ஆனால் முடியவில்லை.
குத்து ... பார் ... ஆஹ்
ஒஹ், இல்லை
கவலைப்படாதே ... ஊப்ஸ்.
யானை, ஒரு சிறுவனை தாக்கப்போகும் பொழுது, சன்னி அவனை மீட்டுக்கொள்கிறான்.


தைரியமுள்ளவன்... நீ இளவரசனுடைய உயிரை காப்பாற்றியிருக்கிறாய், தயவு செய்து, இதை பெற்றுக்கொள்.
பன்னி, சன்னி மேல் பொறாமை கொள்கிறான்.
உனக்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன், என் நண்பா
பரிசு கிடைத்த பணத்தை கொண்டு சன்னி ஒரு தொழில் தொடங்குகிறான்.
பன்னி நீ ஏன் மாங்காய் விற்பதை நிறுத்தி தொழில் எதாவது ஆரம்பிக்கக்கூடாது. நான் உனக்கு கடன் தருகிறேன். பிறகு திருப்பிக்கொடுத்திடு.
ஒஹ், பணம் இல்லாததால் நான் மாங்காய் விற்றுக்கொ ண்டிருக்கிறேன் என நினைக்கிறாயா? கிடைக்கும் சிறிது லாபத்தில் நான் சந்தோஷமாக இருக்கிறேன்.


உன் நண்பன் உன் வெற்றியால் மகிழவில்லை போல் தெரிகிறது. அப்பேற்பட்டவருக்கு, நீ உதவக்கூடாது
நண்பனே, இந்த நிலத்தடியில் நிலக்கரி இருக்கிறது. இது மிகவும் லாபம் தரும் நிலம், விலையும் நியாயமாகத் தான் இருக்கிறது.
இது புஞ்சை நிலம் என எனக்குத்தெரியும், நான் இதை வாங்கினால், சிறிது பணம் சம்பாதிக்கலாம்.
சரி, பன்னி, நான் வாங்கிக்கொள்கிறேன்.
உன் நண்பன் உன்னை ஏமாற்றுகிறான். இது, வீணான நிலம்.
ஹா... ஹா... ஹா.. கவலைப்படாதே, நான் செய்வது எனக்கு தெரியும்.
நிலத்தை நஞ்சை நிலமாக்க அரசர் ஒரு ஏரியை கட்டுகிறார், அது சன்னியின் நிலத்தருகில் இருக்கிறது. இவன் நிலத்தின் விலை பல மடங்கு ஏறி விடுகிறது.


நான் உனக்காக மகிழ்கிறேன்... என் ஆலோசனையால் உனக்கு எந்த நஷ்டமும் இல்லை.
எனக்கு கெடுதல் செய்ய நீ என் விரோதி அல்ல.
உண்மையில், உன்னால் எனக்கு லாபம் கிடைத்தி ருக்கிறது. ஆக, நீ வாங்க நினத்தால், இந்த நில த்தை நான் பழைய விலைக்கே கொடுக்கிறேன்
இல்லை, நன்றி. எனக்கு இந்த நிலத்தில் லாபம் கிடைக்க வில்லை.
பன்னி, பசு மாடுகள் வாங்க முயற்சித்தான், ஆனால், விலை அதிகமாக இருந்ததால் திரும்பி வந்து விடுகிறான்.
ஓய் சன்னி, வா போய் படம் பார்க்கலாம்.


பன்னி, ஒரு பை நிறைய பணம் எனக்கு அரங்கத்திற்கு வெளியே கிடைத்தது.
சன்னி ஏன் எப்பொழுதும் யோகமுள்ளவனாக இருக்கிறான்.
மன்னிக்கவும், நான் சிறிது நேரத்தில் வருகிறேன்.
பன்னி ஒரு திட்டம் போடுகிறான்.
சன்னி, உனக்கு ஒரு பை கிடைத்ததாக சொன்னாயே. இந்த ஆள் இவனுடைய பணப்பையை தொலைத்து விட்டான். இது அவனுடையது.
ஓஹ், அப்படியா .. தயவு செய்து எடுத்துக்கொள்.


அவனை அனுப்பி
விட்டு நான் வருகிறேன்.
பன்னி 1000 காசுகளில் 500 பெற்றுக்கொள்கிறான்.
குறைந்தது, இன்று
நான் இவனைவிட
யோகமுள்ளவனாக
இருக்கிறேன்.
பன்னி எனக்கு கிடைத்த
பை உன்னுடையது.


என்ன ? எங்கே என் பை ? ஓஹ் ஆண்டவனே..!!
ஏன் எனக்கு முதலில் சொல்லவில்லை ?
நான் சொல்லப்போகும் பொழுது, நீ எனக்கு மாறாக திட்டம் போட சென்று விட்டாய். பொறாமை யினால் நீ உன்னையே கெடுத்துக்கொண்டாய்
என் மனைவி, எப்பொழுதும் எச்சரித்தாள் ஆனால் நான் புறக்கணித்தேன் ... பார், என் யோகத்தினால் நீ எனக்கு கெடுதல் ஒன்றும் செய்ய இயல வில்லை.
நீ என் நண்பனாக இருக்க லாயக்கு இல்லாதவன், உன் முகத்தை காட்டாதே. போய் விடு.
முடிவு

# நேரத்தின் மதிப்பு




ஹீசென்பெர்க் ஒரு தற்பெருமை பேசும் மனிதன். அவன் மக்களிடம், தன்னையே புகழ்ந்து கொள்வான்.
எனக்கு எல்லா பொருள்களை ப்பற்றியும், தெரியும், வாக்கு வாதத்தில் நான் யாரையும் ஜெயிக்க முடியும்.
அவன் தற்பெருமை கொண்டவன், நாம் அவனை ஊக்குவிக்கக்கூடாது.
நீ உன்னையே புகழக்கூடாது. யாராவது நிபுணருடைய அத்தாட்சி இல்லாமல் நாங்கள் நம்ப மாட்டோம்.
ஓஹ், நான் சவாலை ஏற்றுக்கொள்கிறேன். போய் எந்த நிபுணரை வேண்டுமானலும் அழைத்து வா, அவனும் என்னை பாராட்டுவான்.


விரைவில், ஹீசென்பெர்க் உடைய
திறமையை மதிப்பிட அவர்கள்
ஒரு இசை வல்லுனரை அழைத்தனர்.
எனக்கு இசையைப்பற்றி எல்லாம்
தெரியும். என் இசை அறிவுக்கு
நீங்கள் அத்தாட்சி கொடுத்தால்
தான், என் கிராம மக்கள் என்
பெருமையை அறிந்து கொள்வர்.
சரி, முதலில், உன் இசை
அறிவை எனக்கு காட்டு.
இருவரும் நீண்ட நேரம், இசையைப்பற்றி விவாதித்தனர்.
ஆனால் அவர் களுடைய கருத்துக்கள் ஒத்துப்போகவில்லை.


நம் கருத்துக்கள் ஏன்
மாறுபடுகின்றன என்று
நிரூபிக்கிறேன்.
சிறிது நேரத்தில் இசை வல்லுனர், சோர்ந்து போகிறார்.
நான் இன்று ஓய்வு
எடுக்க வேண்டும்.
என் வாதம் முடியவில்லை.
நாளை இன்னும் தெளிவாக
சொல்கிறேன், அப்புறம் நீ
புரிந்து கொள்வாய்.
அடுத்த நாள்...
நான் உன் கருத்துக்களை,
இரவு முழுக்க யோசித்து,
புரிந்து கொண்டேன்.
நீ பெரிய இசை நிபுணன்.


சரி, இதை தயவு செய்து, கிராமத்தில் அனைவருக்கும் தெரிவியுங்கள்.
இசை வல்லுனர், இதை தெரிவிக்கையில், அவர் கள் வியக்கின்றனர்.
அவர்களுக்கு இன்னும் சந்தேகம் இருந்ததால், அவர்கள் ஒரு ஓவியரை அழைத்தனர்.
ஹீசென்பெர்க் ஓவியருடன் விவாதித்து அவரும் சோர்ந்து போனார். கடைசியில் அவரும் ஹீசென்பெர்கை புகழ்ந்து, கிராமத்தை விட்டு சென்றார்.


மக்கள் ஹீசென்பெர்க் உடைய திறமையை நம்ப ஆரம்பித்தனர்.
உங்களைப்போன்ற பல திறமை கொண்டவரை நம் ஊரில் கொள்ள இது உண்மையிலேயே எங்களது பாக்கியம். நாங்கள் உங்கள் திறமையை பாராட்டுகிறோம்.
நான் அரசனிடம் போய் என் திறமை பற்றி அறிவிக்க வேண்டும்.
அவன் சில பேரை அரச சபைக்கு உடன் அழைத்து போகிறான்.


ஹீசென்பெர்க் உடைய திறமைகளை கேள்விப்பட்ட அரசன் அவனை சோதிக்க விரும்புகிறான்.
நீ ஏன் உன்னை பலதிறமையுள்ளவனாக கருதுகிறாய்?
மன்னா, நான் பல திறமைகளுடன் பிறந்தேன். நான் அதை கலையின் எந்த உருவத்திலும் நிரூபிக்க முடியும். எந்த அறிஞர், அல்லது இசை வல்லுனருடைய அறிவைக்காட்டிலும், நான் முந்தியிருக்கிறேன்.
இவன் அதிக தன்னம்பிக்கை வைத்துள்ளான், இவனுக்கு அடிப்படை அறிவும் இருக்காது என அரசர் சந்தேகிக்கிறார்.
மன்னா, பல வல்லுனர்கள், இவரை பாராட்டியுள்ளனர்.
யார் பாராட்டியது, அவரை அழையுங்கள்.
நீங்கள் கண்டு பாராட்டிய திறமையை நான் காண முடியவில்லையே, என்ன காரணம்.


மாண்புமிகு மன்னா, ஹீசென்பெர்க் ஒரு பெரிய முட்டாள். அறிஞர்கள் முட்டாளுடன் விவாதிக்கும் பொழுது, அறிஞனுக்கு ஒன்றும் கிடைக்காது, ஆகவே, நேரத்தை வீணாக்காமல் அவனை பாராட்டி விட்டோம்.
மன்னா, நானும் இவர் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன்.
திறமையுள்ளவருக்கு, நேரம், விலையுயர்ந்தது, ஆகவே சில நேரம் மோசமான நிலையிலிருந்து விடுபட, முட்டாள்கள் பாராட்டப்பட வேண்டும்.
அரசன் திட்டி, ஹீசென்பெர்கை திரும்பி அனுப்பி விட்டார்.
இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, ஹீசென்பெர்க் கிராமத்தை விட்டு வேறு கிராமத்திற்கு குடியேறி, சாதாரணமாக வாழ்ந்து வந்தார்.
முடிவு

# மதிப்பு




ஸ்டீவன் ஒரு பணக்காரருடைய மகன். பிலிப் ஒரு அறிஞருடைய மகன். இருவரும் நண்பர்கள்.
ஸ்டீவன் படிப்பில் கவனம் செலுத்துவதேயில்லை, பிலிப் அவனுக்கு மாறாக இருந்தான்.
ஸ்டீவனும் பிலிப்பும் எப்பொழுதும் பணம், அறிவு ஆகிய கடினமான கேள்வி களில் வவாதித்தனர்.
ஸ்டீவன், அறிவுடன் ஒப்பிடும் பொழுது, பணத்தின் மதிப்பு ஒன்றும் இல்லை.
பிலிப், பணத்திற்கு அறிவின் ஆதரவு தேவையில்லை, ஆனால் மறு பக்கம் உனக்கு அறியு இருந்தும் பணம் இல்லையேல், அந்த அறிவு பயனற்றது.
ஸ்டீவன், நாம் எப்பொழுதும் விவாதிக்கொண்டேயிருக்கிறோம், இன்று ஒரு வேலை செய்வோம். போய் தெருக்களில் நடப்போம். மக்கள் யாரை நோக்குகிறார்கள் என்று பார்ப்போ


ஆஹ் ஹா! நீ ரொம்ப சமர்த்து. நம்ம கிராமத்தில் அனைவரும் நம்மை அறிவர். வேறு கிராமத்திற்கு போய் பார்ப்போம்.
இருவரும் வெகு தூரமுள்ள கிராமத்துக்கு போகிறார்கள்.
ஸ்டீவன் நல்ல ஆடை உடுத்தியும் பிலிப் சாதாரண ஆடை உடுத்தியும் இருந்ததால், மக்கள் ஸ்டீவனுக்கு வணக்கம் சொன்னார்கள், பிலிப்புக்கு இல்லை.
பிலிப், இப்பொழுது நீ என்ன சொல்கிறாய்.
நான் என் கருத்தை நிரூபிக்க தவறான வழியை கடைபிடித் தேன், என நினைக்கிறேன்


வீட்டிற்கு போகும் பொழுது, திடீர் என..
பிலிப் நில்லு.
திருடர்கள் இருவரையும் உதைத்து அவர்களிட மிருந்து எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டனர்.
நிறுத்து...
அடிக்காதே, இதை எடுத்துக்கொள்.
திருடர்கள் அவர்கள் கண்களைக்கட்டி மலைகளுக்கு நடுவே விட்டு விட்டு ஓடிவிட்டனர்.
பிலிப், நாம் எங்கே இருக்கிறோம் என நினைக்கிறாய் ?
தெரியவில்லை நண்பா, நடக்கலாம் வா.
இரண்டு மூன்று நாட்கள் மலைகளில் தொலைந்து விட்டனர். இருவரும் மண் படிந்த ஆடைகளுடன், தாடி வளர்ந்து, அவலட்சணமாக காட்சியளித்தனர்.


உணவும் நீரும் இல்லாமல் அவர்கள் சோர்ந்து போய் பலவீனமாக இருந்தனர். கடைசியில், சில நாட்களுக்குப் பின், ஒரு கிராமத்திற்குள் நுழைந்தனர்.
ஒஹ், சில வீடுகளை நான் பார்க்கிறேன், அங்க போகலாம் வா.
கிராமத்தை அடைகின்றனர்.
ஐயா, தயவு செய்து எங்களுக்கு கொஞ்சம் உணவு கொடுங்கள்
திருடர்கள் எங்களை கொள்ளை அடித்துவிட்டார்கள். கொஞ்சம் பணம் கொடுத்தால் எங்கள் ஊருக்குப்போய் பணத்தை திருப்பி கொடுத்து விடுகிறோம்.
ஒஹ், இது புது விதமான பிச்சை.
ஸ்டீவனுக்கு கோபம் வருகிறது.
நான் ஒரு பணக்காரன், நாக்கை அடக்கி பேசு. நீ என்னுடன் என் கிராமத்துக்கு வந்தால், நான் பரிசும் தருகிறேன்
கிராமத்தினர், சிரிக்கின்றனர்.
ஹா ...ஹா


பிலிப் குறுக்கே தலையிடுகிறான்.
நாங்கள் நடிக்க வில்லை. சரி, நான் ஒரு அறிஞன். நீங்கள் எந்த கவிதையை வாசிக்க சொன்னாலும் வாசிக்கிறேன். அதற்கு நீங்கள் பணம் கொடுக்கலாம்.
நான் ஒரு படிக்காதவன், கிராமத் தலைவரிடம் உங்களை அழைத்து செல்கிறேன்.
ஒஹ், எங்கள் கிராமத்தில் ஒரு அறிஞரைப் பார்ப்பது எங்கள் பாக்கியம் .
அவர் மிக்க மரியாதையுடன், அவர்களை வரவேற்கிறார்.
கிராமத் தலைவர், அவர்கள் சில நாட்கள் தங்க இடம் கொடுத்து, பிலிப் இடம் பிள்ளைகளை கவிதை கற்க அனுப்பி வைத்தார். மாலையில், பெரியவர்கள் கூட வந்துகவிதை களை கேட்டனர்.


கிராமத்தில் தங்கியிருந்த ஒரு வாரம் கழித்து
உங்களை ஒரு வாரம் இருக்கச்சொன்னது எங்கள் கௌரவம், பிலிப், மீண்டும் வருக.


கிராமத் தலைவர் அவர்களுக்கு பணம் கொடுத்து அனுப்பி வைத்தார்.


வழியில் ...
ஸ்டீவன், இந்த அனுபவம் அறிவின் மதிப்பை அறிவுறுத்தியிருக்கும்


பணம் நிலைத்து நிற்காது, ஆனால் அறிவு நிற்கும். நம் நிகழ்ச்சியை உதாரணமாக கொள்.
ஸ்டீவன் அறிவின் மதிப்பை அறிந்து கொண்டான்.
ஸ்டீவன் அந்த வயதில் வெட்கப்படாமல் படித்து பணம் சம்பாதித்தான். அதன் பிறகு, பணத்தின் மதிப்பும் அறிந்தான்.
முடிவு

# திருடனின் நேர்மை




சாமுவேல் ஒரு ஏழை விவசாயி, சர் டாமன் என்ற பணக்கரரிடம் மகளின் திருமணத்திற்காக 10 தங்க காசுகள் கடனாக வாங்கினார்.
பெரிய கஷ்டத்தோடு சாமுவேல் பத்து தங்க காசுகள் சர் டாமனுக்கு திருப்பி கொடுக்க சேமித்து வைத்தார்.
கடைசியில், சர் டாமனுடைய கடனை திருப்பி கொடுக்க பணம் சேர்த்துவிட்டேன். முதல் மணியிலேயே போய் கடனை அடைக்க வேண்டும்.
ரொம்ப நல்லது !!! இன்றிரவு, திருட நல்ல வாய்ப்பு.
அடுத்த நாள் காலை சாமுவேல் அதிர்ச்சியடைந்தார்.
ஓஹ் ஆண்டவனே, எங்கே என் தங்க காசுகள்.. நேற்றிரவு எண்ணி, இங்கே தானே வைத்தேன்.


அவர் வீடு முழுக்க தேடுகிறார், ஆனால் ...
யாரோ திருடிக்கொண்டார்கள். ! சேர்த்து வைக்க எனக்கு இத்தனை வருடங்கள்: பிடித்தன, இப்பொ நான் என்ன செய்ய ?
அடுத்த நாள் காலையில் சர் டாமனிடம் போய் அனைத்தையும் விளக்கினார்.
என்னுடைய அனுதாபங்கள் சாமுவேல்.
சர் டாமன், எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்.
சர் டாமன் இரக்கமுள்ளவர், ஆகவே அவகாசம் கொடுத்தார், கடனை திருப்பி தர.
நான் தொலைந்தேன். கடனை திருப்பி கொடுக்க இன்னும் எத்தனை நாளாகும் என எனக்கு தெரியாது.
நேரம் போக போக, பணத்தை சேமிப்பது மிக கஷ்டமாக இருந்தது. மக்கள் அவனை நினைவு படுத்தும் பொழுது, எரிச்சல் பட்டு, சர் டாமனைப்பற்றி தவறாக பேச ஆரம்பித்தார்.


சாமுவேல் தவறாக பேசுவதை சர் டாமன் கேள்வியுற்றார்.
க்லைவ் , சாமுவேல் இடம் போய் உடனே கடனை திருப்பிக்கொடுக்கும்படி கேள்.
சாமுவேல், சர் டாமன் உன்னை உடனே வந்து கடனை திருப்பிக்கொடுக்கும்படி கேட்டார்.
என்னிடம் பணம் இருக்கும் பொழுது வருகிறேன்.
நீ அவருடைய கடனை திருப்பி கொடுக்கவில்லை என்றால், உன்னை கிராமத்துக்கு வெளியே அனுப்பி விடுவார்.
யார் என்னை கிராமத்துக்கு வெளியே அனுப்புவர் என்பதை நான் பார்க்கிறேன். இந்த கிராமம் அவன் அப்பன் சொத்து இல்லை. எங்களைப் போல ஏழைகளிட மிருந்து அவன் பணம் சம்பாதிக்கிறான். அப்படி இல்லையென்றால், எங்கிருந்து இவனுக்கு இந்த செல்வம் வந்தது.
சர் டாமனுக்கு எல்லா விவரமும் க்லைவ் விளக்கினான். அவர் சாமுவேல் மீது மிகவும் கோபப்பட்டார்.
நான் இப்பொழுது சும்மா இருந்தால், முழு கிராமமும் எனக்கு கடன் திருப்பிக்கொடுப்பதை நிறுத்திவிடுவர். நான் ஏதாவது செய்தாக வேண்டும். ஆனால் என்ன செய்வது.



அதே இரவில், சர் டாமன் திடீர் என அடுத்த அறையிலிருந்து ஒரு சத்தம் கேட்டார்.
சர் டாமன் உள்ளே போய் ஒரு திருடன் இருந்ததை பார்த்தார்,
டேய்.... நீ...
சர் டாமன் திருடனை பிடித்தார்.
என்னை மன்னித்து விடுங்கள் ஐயா.
நான் ஏன் மன்னிக்க வேண்டும் ?
தயவு செய்து, கருணை கொள்ளுங்கள், நீங்கள் சொன்னால், நான் எதையும் செய்வேன்.
சரி, நான் உன்னை விட்டு விடுகிறேன், ஆனால் ...
திருடன் அதிர்சியடைந்தான்.
சரி, தயவு செய்து, நான் என்ன செய்ய வேண்டும் என சொல்லுங்கள்.
கிராமத்தில் சாமுவேல் என்ற ஆளை நீ துன்புறுத்த வேண்டும்.


நான் யாரையும் துன்புறுத்த மட்டேன். நான் ஒரு திருடன் மட்டும். யாருக்கும் தீங்கு செய்வது ஒரு பாவம்
உனக்கு பாவத்தைப்பற்றி பேச உரிமை இல்லை. திருடுவதும் ஒரு பாவம் தான், இளைஞனே.
ஆமாம் திருடுவது ஒரு பாவம், நான் ஒப்புக்கொள்கிறேன். எனக்கு வேறு வழியில்லாமல் தான் நான் திருடுகிறேன். ஆனால் நான் இன்று வரை திருடிய பணத்தின் குறிப்பு வைத்துள்ளேன். என் நேரம் மாறும் பொழுது, நான் அவர்களுக்கு வட்டியுடன் அவர்களின் பணத்தை திருப்பி கொடுத்து விடுவேன்.
நான் திருடினால் திருப்பி கொடுக்க முடியும் ஆனால் யாரையும் துன்புறுத்த மாட்டேன். நான் உங்கள் வேலையை செய்ய முடியாது, ஐயா.


ஒரு திருடன் இவ்வளவு நேர்மையுள்ளவனாக இருந்தால், நான் எப்படி இவ்வளவு கீழ்த்தரமாக போவது. .
நன்றி, இளைஞனே.. நான் பாவம் செய்வதிலிருந்து நீ என்னை காப்பற்றி விட்டாய். உன் பெயர் என்ன ?
பிரெட்டி, ஐயா
சர் டாமன் சிறிது பணத்தை திருடனுக்கு கொடுத்தார்.
சரி, பிரெட்டி, தயவு செய்து, இந்த பணத்தை பெற்றுக்கொண்டு, உன்னுடைய கடன்களையெல்லாம் தீர்த்து விடு. நீ இனி எனக்காக வேலை செய்ய வேண்டும். உன்னைப் போல் நேர்மையான ஒரு ஆள் என்னிடம் வேலைக்கு வேண்டும்.
சாமுவேல் உடைய பத்து தங்க காசுகளையும் சேர்த்து, பிரெட்டி திருடிய பணத்தை எல்லோருக்கும் திருப்பி கொடுத்து விடுகிறான்,


திருடனுடைய நேர்மையை அறிந்து, சாமுவேல் யோசித்தான்..
திருடிய பணத்தை திருடன் திருப்பிக்கொடுக்கும் பொழுது, கடனை நான் சர் டாமனுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்.
சாமுவேல் சர் டாமன் இடம் மன்னிப்பு கேட்டு வாங்கிய பணத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுத்தான்.
பிரெட்டியை சர் டாமன் வேலைக்கு அமர்த்தினார்.
கிராமத்தில் மக்கள் திருடனுடைய நேர்மையையும், அது சர் டாமனையும் சாமுவேலையும் மாற்றிய விதத்தையும் அறிந்தனர். இது எல்லோருக்கும் ஓர் கண் திறக்கும் நிகழ்ச்சியாக இருந்தது.
முடிவு

# அறிவுத்திறம்




பெலிக்ஸ், டோரி பெனிக்ஸ் நாட்டில் வாழ்ந்த தம்பதிகள். அவர்களிடம் சில ஏக்கர் பண்ணை நிலம் இருந்தது. அவர்கள் பயிரிட்டனர்.
ஒரு நாள் அறியாத நோயினால் அவருடைய இரண்டு மாடுகள் இறந்து விட்டன. அவர் வருத்தப்பட்டார்.
ஓஹ், ஆண்டவனே, என்னுடைய மாடுகளை தொலைத்து விட்டேன். எப்படி என் நிலத்தை உழுவது இப்பொழுது நான் என்ன செய்ய ?
பயிரிடவும் வேலையாட்கள் இல்லை, ஓஹ் ஆண்டவனே, தயவு செய்து உதவுங்கள்.
அந்த நாட்களில் இரவில் இரு திருடர்கள் பெனிக்ஸ் கிராமத்தை கொள்ளை அடித்தனர். ஒரு நாள் பெலிக்ஸ் வீட்டையும் கொள்ளை அடிக்க திட்டம் போட்டனர்.



பெலிக்ஸ் எழுந்து விட்டார்.
ஓஹ், திருடர்கள்...
அவருக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. மனைவி காதில் ஏதொ கிசுகிசுக்கிறார்.
அன்பே, வீட்டில் திருடர்கள் பிரவேசித்துள்ளனர், பயப்படாதே, நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எனக்கு ஒரு யோசனை வருகிறது, அதை நீயும் கடைபிடி.
அன்பே, இரண்டு திருடர்கள் நம் கிராமத்தை கொள்ளை அடிக்கிறார்கள் என்று உனக்கு தெரியுமா? நம் விலை உயர்ந்த பொருள்களை நீ பாதுகாப்பான இடத்தில் மறைத்து வைக்க வேண்டும்.
ஆமாம், எனக்கு தெரியும் அன்பே. ஆகவே நம் பணத்தையும் உன் ஆபரணங்களையும் நம் பண்ணை நிலத்தில் மறைத்து வைத்துள்ளேன்.
இதை யாரிடமும் சொல்லாதே.
சரி என் கணவா, நீ ரொம்ப புத்திசாலி.


திருடர்கள் இதைக்கேட்டு,
பண்ணை நிலத்திற்கு ஓடுகின்றனர்.
இரு திருடர்களும் தேட ஆரம்பித்தனர். நிலத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் தோண்டி விட்டனர், ஆனால் அவர்களுக்கு எதுவும் கிடைக்க வில்லை. திருடர்கள் கோபப்பட்டு பெலிக்ஸ் வீட்டிற்குள் போக முடிவு செய்தனர்.
அன்பே, நான் மறந்து விட்டேன், நான் புதையலை கிணற்றுக்குள் மறைத்து விட்டேன். இப்பொழுது எந்த பயமும் இல்லை.
திருடர்கள் இதைக்கேட்டு,
பண்ணை நிலத்துக்கு ஓடினர்.
அண்ணே, நான் கிணற்றுக்குள் போய் தண்ணீரை இறைக்கின்றேன்.
திருடர்கள் கிணற்றுத்தண்ணீரை இறைத்து வெளியே கொட்டியும் அவர்களுக்கு அடியில் ஒன்றும் கிடைக்கவில்லை.
அவர்கள் கோபத்துடன்
பெலிக்ஸ் வீட்டிற்குள் போகின்றனர்.


நன்றி ஆண்டவனே, இப்பொழுது, நிலம் உழப்பட்டு, நீரும் இறைக்கப்பட் டுவிட்டதனால், நான் காலையில் முதல் வேலையாக பயிரிட முடியும். அதற்கு முன் அந்த இரு திருடர்களுக்கு நான் நன்றி சொல்லி அவர்களை வரவேற்கவேண்டும்.
பெலிக்ஸ் வீட்டிற்கு வெளியே வந்து, திருடர்களை சந்திக்கிறான்.
அன்புள்ள சகோதரர்களே, வருக. உள்ளே வந்து அமருங்கள். எங்களுடன் சாப்பிடுங்கள்.
இரு திருடர்களும் பெலிக்ஸ் இவர்களை வரவேற்று விருந்துக்கு அழைப்பதை பார்த்து குழம்பினர்.
சகோதரர்களே, நான் இரண்டு மாடுகளை இழந்து விட்டேன். பயிர் செய்ய உதவியற்று இருந்தேன். அந்த நேரத்தில், நீங்கள் கொள்ளை அடிக்க வந்தீர்கள். நான் உங்களை வழி திருப்பி என் நிலத்தை உழ வைத்தேன்.
சகோதரர்களே, பயமில்லாமல் உணவு சாப்பிடுங்கள். உங்கள் உதவிக்கு நன்றி, உங்கள் உழைப்புக்கு நான் ஊதியம் தந்து விடுகிறேன்.


ஐயா, உழைப்பின் இனிமையை இன்று நாங்கள் புரிந்து கொண்டோம். வருங்காலத்தில் நாங்கள் உழைத்தே வாழ்வோம். நாங்கள் இனி திருட மாட்டோம். எங்கள் பலத்தை அறிந்து கொள்ளச்செய்ததற்கு நன்றி.
சகோதரா, மிடுக்காக இருப்பதை விட, புத்திசாலியாக இருப்பதே மேல்.
ஆமாம், நீ சொல்வது சரி தம்பி, நட, போய் எதாவது வேலை தேடலாம்.
நான் உங்களுக்கு என் பண்ணையில் வேலை கொடுக்கிறேன். உங்கள் உழைப்புக்குத்தக்க ஊதியமும் கொடுக்கிறேன்.
கடைசியில், திருடர்கள், மகிழ்ச்சியாக வீட்டிலிருந்து வெளியே வந்தனர். பெலிக்ஸ் இடம் வேலைக்கு அமர்ந்தனர்.
முடிவு




**Buy Books & eBooks Online at www.indianvedicschool.com**

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**

Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com www.indianvedicschool.com
+91 7337200273